# மெயின்டீ விழா ஒழுங்கமைப்புக் குழு
(Maindee Festival Association)

## நாங்கள் யார்?

இந்த விழா ஒழுங்கமைப்புக் குழு சிரமதான அடிப்படையில் இயங்கும் ஓர் நிறுவனம் ஆகும். எமது நிறுவனம் 1997 இல் மெயின்டீ பகுதிகளான நியூபோட் **(Newport)** சவுத்வேல்ஸ் **(South Wales)** இல் வாழும், மற்றும் பணிபுரியும் பல்லின மக்களின் கலைப் பங்களிப்புகளை வெளிக்கொணர்ந்து விழாவாக கொண்டாடும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது. இவ்விழாவை வருடாவருடம் ஆடி மாதத்தில் பல்லினக்கலை நிகழ்வுகளோடு ஒழுங்கு செய்து வருகிறோம்.

எமது நிர்வாகம் ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதத்தில் நடைபெறும் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்படும். மாதாந்தக் கூட்டங்கள் **Eton Rd** இல் அமைந்துள்ள **Community House** இல் நடைபெறும். புதிய அங்கத்தவர்களை அன்புடன் வரவேற்கிறோம்.

எல்லா இன மக்களையும் எம்முடன் இணைந்து செயற்பட வேண்டுகிறோம். **New port** வாழ் மக்களின் பல்லினக் கலாச்சார நிகழ்வுகளை இணைந்து கொண்டாடுவதற்கு அவர்களிடையே நல் உறவுப்பாலங்களை அமைப்பதே எமது நோக்கமாகும்.

நாம் இதுபோன்ற கலை நிகழ்வுகளுக்கு ஊடாக எல்லா இன, மத, நாடு, வயது, கலாச்சார பின்னணி ஐச் சார்ந்தோரையும் ஒன்றிணைக்கிறோம்.

எங்களுடைய கூட்டங்கள் ஆங்கில மொழியிலேயே நடைபெறும். ஆங்கிலம் தெரியாதவர்களையும் நாம் அன்புடன் அழைக்கிறோம். எங்களால் முடிந்த வரையில் உங்களுக்கு மொழி பெயர்ப்பாளர்களை எற்பாடு செய்து தருவோம்.

எமது இணையத்தளம்: **www.maindee.org** நீங்கள் எமது இணையத்தளத்தை இலவசமாகப் பார்வையிட **Chepstow Road** இல் அமைந்துள்ள நூலகத்தையோ அல்லது ஏனைய உங்கள் பகுதியில் உள்ள நூலகங்களையோ நாடவும்.

உங்களுக்கு மேலதிக விபரங்கள் தேவையென்றாலோ அல்லது எம்முடன் இணைந்து செயற்பட விருப்பினாலோ தயவு செய்து தயங்காது எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

Maindee Festival Association, c/o Community House, Eton Rd, Newport NP19 0BL
Telephone: 0 1633 762155    E:mail: info@maindee.org

எமக்கு நிதிப் பேருதவி வழங்கிய இந்த நான்கு நிறுவனங்களையும் நாம் நன்றியோடு நினைத்துக் கொள்கிறோம்.